**தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து மன்றத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, மன்றத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கல்லூரியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர

தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மன்றத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சங்கம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு மன்றத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- மன்றத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- மன்றத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- மன்றத்தின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- மன்றத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதன் மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொது மற்றும் விசேட அதிகாரத்திற்கிணங்க கொடுக்கல் வாங்கல்கள் நிறைவேற்றப்பட்டது எனவும் பிரயோகிக்கக்கூடிய அறிக்கையிடல் நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக அனுமதிப்பதற்கும் அவசியமாக கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்பட்டிருந்ததும் எனவும் சொத்துக்களிற்கான கணக்களிப் பொறுப்பை பேணுவதற்கும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது விசேட அங்கீகாரத்திற்கு இணங்க மாத்திரம் சொத்துக்களை அணுகுவதை அனுமதிப்பதற்கும் மற்றும் தற்போதுள்ளவாறான சொத்துக்களுடன் நியாயமான இடைவெளிகளில் மற்றும் பொருத்தமான நடவடிக்கை ஏனைய வேறுபாடுகளுடன் தொடர்பாக எடுக்கப்பட வேண்டும் என்பவற்றையும் நியாயமாக உறுதிப்படுத்துவதற்கு உள்ளகக் கணக்கீட்டு போதியளவு கட்டுப்பாடுகளிற்கு “திட்டமிடுதல் மற்றும் பராமரிப்பு” என்ற முறைமையொன்று நிறுவகத்திற்கு தேவைப்படுகின்றது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | உரிய நியமங்களுடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01 இன் 99 ஆம் பந்தியின் பிரகாரம் காலப்பகுதியில் இனங்காணப்பட்ட சகல வருமானங்களும் செலவினங்களினதும் விடயங்கள் இலாபம் அல்லது நட்டங்களில் உள்ளடக்கப்பட வேண்டியிருந்த போதிலும் முன்னைய ஆண்டிற்குரிய ரூபா 6,173,432 கூட்டுத் தொகையான பாதுகாப்பு மற்றும் தொலைபேசி செலவினங்கள் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்ததுடன் அவை மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டிற்குரிய இந்த செலவினங்கள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01 இன் 99 ஆம் பந்தியின் பிரகாரம் காலப்பகுதியில் இனங்காணப்பட்ட சகல வருமானங்களினதும் செலவினங்களினதும் விடயங்கள் இலாபம் அல்லது நட்டங்களில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் தவறவிடப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது ஆண்டிற்குரிய செலவினங்கள் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 49 ஆம் பந்தியின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யும் போது சொத்து தொகுதிக்குரிய | அரசாங்கத்தின் மதிப்பீட்டு அறிக்கை கிடைத்ததன் பின்னர் ஏனைய கட்டிடங்களையும் மீள்மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் |

| | | | |
|---|---|---|---|
| | சகல ஆதனங்களும் மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2021 ஆம் ஆண்டின் போது ஐந்து நிலையங்களுக்குரிய கட்டிடங்கள் மாத்திரம் ரூபா 46,546,500 தொகையில் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு நிதிகூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | நடவடிக்கை எடுக்கப்படும். | தயாரிக்கப்படல் வேண்டும். |
| (இ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லா சொத்துக்களுக்கான பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையின் காரணமாக நடப்பாண்டின் இறுதியில் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட கிரயம் ரூபா 1,780,839,673 ஆன 11 வகையான சொத்துக்கள் தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஏற்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வழுக்கள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் மொத்த இழிவுப் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படுகின்ற நடைமுறையல்லா சொத்துக்கள் அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மதிப்பீட்டாளரை வரவழைத்து முறையான பிரகாரம் மீள்மதிப்பீட்டை மேற்கொண்டு உரிய கணக்கீடு செய்தல் 2022 ஆம் ஆண்டில் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |

**1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மன்றத்திற்கு சட்டரீதியான உரித்து காணப்பட்ட 03 ஏக்கர் 92 பேர்ச் அளவான 03 காணிகளின் பெறுமதி | இந்தக் காணி தொடர்பாக அரசாங்கத்தின் மதிப்பீட்டு அறிக்கையினை பெற்றுக் கொள்வதற்காக | மன்றத்திற்கு சட்டரீதியான உரித்து உரிமையாக |

| | | | |
|---|---|---|---|
| | மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | தேவையான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள துடன் அரசாங்கத்தின் மதிப்பீட்டுத் திணைக்களத்திலிருந்து உரிய மதிப்பீட்டு அறிக்கை கிடைத்ததன் பின்னர் உரிய பெறுமதி கணக்கீடு செய்யப்படுமென அறியத்தருகின்றோம். | உள்ள சொத்துக்களின் பெறுமதியை நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2019 ஆம் ஆண்டில் சுகததாச விளையாட்டரங்கில் இளைஞர் விளையாட்டு விழாவை நடாத்துவதற்காக வழங்கப்பட்ட ரூபா 2,293,733 பணம் 2021 ஆம் ஆண்டின் போது நடாத்தப்பட்ட இளைஞர் விளையாட்டு விழாவிற்காக செலவிடப்பட்டிருந்த போதிலும் அந்தப் பணம் 2021 ஆம் ஆண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்படாமல் 2019 ஆம் ஆண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டமையால் மீளாய்வாண்டின் பற்றாக்குறை அப்பெறுமானத்தால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டின் போது நாட்டில் காணப்பட்ட கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையின் அடிப்படையில் தேசிய விளையாட்டு விழாவை நடாத்துவதற்கு முடியாதிருந்ததுடன் 2021 ஆம் ஆண்டின் திசெம்பர் மாதத்தில் இந்த விளையாட்டு விழா நடாத்தப்பட்டிருந்ததுடன் அந்த செலவினம் 2019 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட தொகையில் ஈடுசெய்யும் அடிப்படையில் பிழையான முறையில் 2019 ஆம் ஆண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்வரும் ஆண்டின் போது இவ்வாறான அடிப்படை கணக்கீட்டு வழுக்கள் ஏற்படாமல் இருப்பதற்கு கண்காணித்துக் கொள்ளப் படுவதுடன் உரிய உத்தியோகத்தர்களுக்கு விடயம் தொடர்பாக அறிவுறுத்தப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது ஆண்டிற்குரிய சகல செலவினங்களும் உள்ளடக்கப்படல் வேண்டும். |
| (இ) | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது காணி மற்றும் கட்டிடங்களை அபிவிருத்தி செய்வதற்காக செலவிடப்பட்ட ரூபா 5,196,942 தொகையான மூலதன செலவினம் ஆண்டின் வருமான செலவினமாக கணக்கீடு | கணக்காய்வு பரீட்சிப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பிரகாரம் உரிய சரிசெய்தல்கள் 2022 ஆம் ஆண்டில் இரண்டாவது காலாண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |

செய்யப்பட்டமையால் அப்பெறுமதியால் ஆண்டின் தேறிய பற்றாக்குறை அதிகரித்தும், நிலையான சொத்துக்கள் குறைத்தும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக மீளாய்வாண்டின் பெறுமானத்தேய்வு செலவினமும் ரூபா 312,138 குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

**1.5.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | நேரொத்த அறிக்கையின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| ரூபா | ரூபா | ரூபா | | |
| 164,162 | 104,300,311 | 104,136,149 | 2022 ஆம் ஆண்டில் இந்த மீதியை தீர்த்து வைப்பதற்காக தேவையான நிதியேற்பாட்டை பெற்றுக் கொள்வதற்கு குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் பொதுத் திறைசேரியிடம் கோரப்பட்டிருந்ததுடன் 2022 ஆம் ஆண்டு முதல் முறையான நிதிக் கட்டுப்பாட்டின் கீழ் உரிய செலவினங்கள் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க கணக்கீடு செய்யப்படும் என அறியத்தருகின்றோம். | வரையறுக்கப்பட்ட இலங்கை இளைஞர் சேவைகள் தனியார் கம்பனிக்கு செலுத்த வேண்டிய கடன் மீதியை கம்பனியின் தகவல்களுடன் பரீட்சித்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.5 ஒன்றிணைத்தல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 98 சதவீத பங்கு உரித்துடைய வ/ப இலங்கை இளைஞர் சேவைகள் தனியார் கம்பனி 1981 ஆம் ஆண்டின் | கம்பனியின் கணக்காண்டு ஏப்ரல் 01 ஆந் திகதி முதல் மார்ச் 31 வரையாக இருந்த போதிலும் தேசிய இளைஞர் சேவைகள் | மன்றத்தின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கின்ற திகதியில் உள்ளவாறான வ/ப |

| | | |
|---|---|---|
| போது ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்காதிருந்ததுடன் கம்பனியால் 2018 ஆம் ஆண்டு முதல் நிதிக்கூற்றுக்கள் தயாரித்து கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மன்றத்தின் நிதியாண்டு சனவரி 01 முதல் திசெம்பர் 31 ஆந் திகதி ஆனமையால் கம்பனியின் நிதியாண்டை திருத்துவதற்கு கம்பனிச் சட்டத்தின் ஏற்பாட்டின் கீழ் உள்ள இயலுமை எதிர்காலத்தில் கண்டறிந்து மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகவும் அது தொடர்பாக உங்களுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது எனவும் அறியத்தருகின்றோம். | இலங்கை இளைஞர் சேவைகள் தனியார் கம்பனியின் நிதித் தகவல்களுடன் சேர்த்து ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2018 திசெம்பர் 07 ஆந் திகதிய PS/SP/SB/21/2018 ஆம் இலக்க சனாதிபதி செயலாளரின் சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமாக வதிவிட பாடநெறி நடாத்துவதற்காக பயிற்சி நிலையங்களில் போதியளவான வசதிகள் காணப்படும் போது 2021 பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் பதுளை மாவட்டத்தில் அமைந்துள்ள தனியார் நிறுவனமொன்றில் 03 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தி அதற்காக சாரதிகளை உள்ளடக்கிய 194 உத்தியோகத்தர்களுக்காக உணவு மற்றும் தங்குமிட வசதிகளுக்காக ரூபா 3,246,600 செலவினம் செய்யப்பட்டிருந்தது. | கொவிட் தொற்றுநோய் நிலைமைகளுக்கிடையே உத்தியோகத்தர்கள் தமது கடமைகளை சமபங்காக நிறைவேற்றி 2021 ஆம் ஆண்டில் சமூகம் முகங்கொடுகின்ற சவால்களுக்கு தேவையான பிரகாரம் இளைஞர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்ட சாகச விளையாட்டுக்கள் (Adventure Sports) மற்றும் புத்திசாலித்தனமான விளையாட்டுக்கள் சுகாதார பாதுகாப்பு முறைகளுக்கு இணங்க, நிறுவனத்தின் விசேட மதியுரையாளர்களின் மூலம் அமுல்படுத்தி பயிற்சி செயலமர்வை வெற்றிகரமாக நடாத்திக் கொள்வதற்கு இந்த நிறுவனம் தெரிவு செய்யப்பட்டு செயலமர்வு நடாத்தப்பட்டது என்பதை தயவுடன் குறிப்பிடுகின்றோம். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2015 செப்தெம்பர் 25 ஆந் திகதிய SP/SB/07/15 ஆம் இலக்க சனாதிபதி செயலாளரின் சுற்றறிக்கை | ஆகக்குறைந்த கிரயத்தின் கீழ் உயர்ந்த நலன்களை அடைந்துக்கொள்ளக் கூடிய வகையில் விழாக்கள் ஒழுங்கமைக்கப்பட்டு அமுல்படுத்தப்பட வேண்டிய போதிலும் எரமிணியாய விவசாய பயிற்சி நிலையத்தில் 2020 ஆம் ஆண்டில் ஏர்பூட்டு விழா மற்றும் பொன் அறுவடை விழாவிற்காக கூட்டுமொத்தமாக ரூபா 399,176 செலவிடப்பட்டிருந்ததுடன் இந்த செலவினத்தில் உபசரிப்பு செலவினம் மற்றும் தலைவரை உள்ளடக்கிய உத்தியோகத்தர்களின் தங்குமிட வசதிகளாக ரூபா 290,250 ஹொட்டல் கட்டணத்தையும் உள்ளடங்கியிருந்தது. | எதிர்காலத்தில் இவ்வாறான முறையில் செலவினங்கள் செய்யாத வகையில் நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்தும் போது அரச மற்றும் நிறுவன ரீதியில் விநியோகிக்கப்பட்டுள்ள சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படுமாறு சகல பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களுக்கும் ஆலோசனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 249,189,000 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 198,007,000 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 51,182,000 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு இளைஞர் அபிவிருத்திச் செலவினம் ரூபா 91,951,000 இனால் அதிகரித்தமையும், நிறுவன மற்றும் நிர்வாகச் செலவினம் ரூபா 16,362,000 இனால் அதிகரித்தமையும் பிரதான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட இலங்கை யூத் ஸ்டார்ட் அப் வெலேன்ச் நிகழ்ச்சித் | ஸ்டார்ட் அப் வெலேன்ச் நிகழ்ச்சித் திட்டத்தின் ஆரம்ப நோக்கமாக இளைஞர் முயற்சியாளர்களை | செயற்திட்டத்தின் ஆரம்பிக்கும் நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் |

| | | | |
|---|---|---|---|
| | திட்டத்தின் கீழ் 04 உப நிகழ்ச்சித் திட்டங்களுக்காக 2021 திசெம்பர் 20 ஆந் திகதி வரையில் ரூபா 1,402,810 செலவிடப்பட்டிருந்த போதிலும் அந்த நிகழ்ச்சித் திட்டம் அமுல்படுத்தப்படாமையின் அடிப்படையில் அந்தப் பணம் பயனற்ற செலவினத்திற்கு உட்பட்டிருந்தது. | உருவாக்குதல் மற்றும் தொழில் முயற்சிகளை வெளிக்கொணர்தல் மூலம் ஏனைய இளைஞர் முயற்சிகளை ஊக்குவிக்கும் நோக்காகக் கொண்டு சர்வதேச ரீதியில் வெற்றியடைந்த வியாபாரிகள் சிலருடன் தொடர்பை ஏற்படுத்தி Full HD தொழில்நுட்பத்தின் கீழ் இந்த வீடியோ ஒளிப்பதிவை தயாரிப்பதற்காக லெப்ட் ஹேன்ட் ஸ்டுடியோ நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 300,000 முற்பணத் தொகை உரிய நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. | திட்டங்கள் தயாரித்து சரியான மேற்பார்வையின் கீழ் அமுல்படுத்த வேண்டியிருந்த துடன் அரசாங்கத்தின் பணத்தை சிக்கனமான ரீதியில் பயன்படுத்துவதை நோக்காகக் கொண்டு விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | மன்றத்தால் எதிர்காலத்தின் போது அமுல்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்காக பங்குபற்றுகின்ற உத்தியோகத்தர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக ரீசேர்ட் மற்றும் காற்சட்டைகள் கூட்டுமொத்தமாக 7,000 அளவொன்று ரூபா 4,706,100 செலவில் 2021 ஏப்ரல் 30 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அதில் 2021 ஒக்தோபர் 15 ஆந் திகதி வரையிலும் களஞ்சியத்தில் 5,453 இருப்பொன்று காணப்பட்டது. அவ்வாறு இருக்கும் போது ‘‘சூஹுறு கெவத்த’’ நிகழ்ச்சித் திட்டத்திற்காக 2021 ஆகஸ்ட் 13 மற்றும் செப்தெம்பர் 28 என்ற திகதிகளில் ரூபா 643,500 செலவில் 900 ரீசேர்ட்டுக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | களஞ்சியத்தில் காணப்பட்ட ரீசேர்ட் ஏனைய நிகழ்ச்சித் திட்டத்திற்காக அச்சிடப்பட்டவையாக இருந்ததுடன் அந்த ரீசேர்ட்டுக்கள் இந்த நிகழ்ச்சித் திட்டத்தை மேம்படுத்துவதற்கு பயன்படுத்த முடியாதிருந்தமையால் மேற்கூறப்பட்ட ரீசேர்ட் ‘‘சூஹுறு கெவத்த’’ என்ற பெயரில் அச்சிடப்பட்டிருந்தது. | அரசாங்கத்தின் பணத்தை சிக்கமாக பயன்படுத்துவது தொடர்பில் விசேட கவனம் செலுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கொவிட் நோய் சிகிச்சை சேவைக்கு உதவி வழங்கும் நோக்கில் நோயாளர் காவும் வண்டியை நவீனமயப்படுத்தி வைத்தியசாலைகளுக்கு வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2021 யூன் 06 மற்றும் 19 ஆந் திகதிகளில் எரமிணியாய விவசாய பண்ணைக்கு எடுத்து வரப்பட்ட 02 நோயாளர் காவும் வண்டிகள் உரிய பழுதுபார்த்தல்கள் இன்றி 2021 யூன் 21 மற்றும் 25 ஆந் திகதிகளில் பண்ணையின் வளவில் இருந்து மீண்டும் எடுத்துச் செல்லப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துவதற்குரிய ஒட்டுமொத்த விழாவிற்காக செலவிடப்பட்ட ரூபா 149,365 தொகை பயனற்ற செலவினமாக இருந்தது. | எரமிணியாய பயிற்சி நிலையத்தில் மோட்டார் தொழில்நுட்ப பாடநெறியை பின்பற்றுகின்ற பயிலுனர்களின் திறன்களை விருத்தி செய்யும் எதிர்பார்ப்புடன் உடைந்த நோயாளர் காவும் வண்டியை நவீனமயப்படுத்தும் நோக்குடன் இந்த செயற்பதிட்டம் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் கொவிட் தொற்று நோய் நிலைமையின் காரணமாக உரிய செயற்திட்டத்தை அமுல்படுத்துதல் தாமதமடைந்திருந்தது. | அரசாங்கத்தின் பணத்தை சிக்கமாக பயன்படுத்துவது தொடர்பில் விசேட கவனம் செலுத்துதல் வேண்டும். |
| (ஈ) | நோயற்ற துடிப்புள்ள வாழ்வை நாடு முழுவதும் இளைஞர் பரம்பரையினருக்காக வழங்கும் நோக்காகக் கொண்டு பிரதேச செயலக மட்டத்திலும், இளைஞர் சமூக மட்டத்திலும் உடற்பயிற்சி நிலையங்களை ஸ்தாபிக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் எரமிணியாய அழகியல் மற்றும் விவசாய பயிற்சி நிலைய வளவில் உடற்பயிற்சி நிலையத்தை ஸ்தாபித்தல் மற்றும் உபகரண தொகுதிகளை கொள்வனவு செய்வதற்காக கூட்டுமொத்தமாக ரூபா 1,095,258 செலவிடப்பட்டிருந்த போதிலும் அந்த நிலையம் பயன்படுத்தப்படாமையின் காரணமாக மொத்த | உடற்பயிற்சி நிலையம் இளைஞர் சமூகத்தில் இளைஞர் யுவதிகள் மற்றும் நிலையத்தின் பயிலுனர்களுக்கு பயன்படுத்துதற்காக ஸ்தாபிக்கப்பட்டதாகும். நாட்டில் காணப்பட்ட மோசமான சுகாதார நோய் நிலைமையின் காரணமாக பயன்படுத்துதல் தற்காலிகமாக வரையறுக்கப்பட்ட போதிலும் எதிர்காலத்தில் திறந்து வைப்பதற்கான வழிமுறைகள் தயாரிக்கப்பட்டுள்ளது. | எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செலவினமும் பயனற்ற செலவினத்திற்கு உட்பட்டிருந்தது. | | |
| (உ) | 2021 ஆம் ஆண்டில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் நோக்கத்திற்கு புறம்பான பணியாக இரத்தம் வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தை நடாத்துவதற்காக ரூபா 11,519,609 செலவிடப்பட்டிருந்தது. இதற்காக மன்றத்தின் கட்டிடம் மற்றும் உபகரணங்களை பயன்படுத்தாமல் நாளொன்றிற்கு ரூபா 83,525 வீதம் 24 நாட்களுக்காக ரூபா 2,004,600 செலுத்தி 01 டோம்ஸ் நிறுவன வளவில் அமைத்ததன் அடிப்படையில் அந்த செலவினம் பயனற்ற செலவினமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | பிரதான அலுவலக வளவில் விடுதியில் இளைஞர் யுவதிகள் இருக்கின்றமையால் வெளிநபர்கள் நிறுவன வளவிற்குள் வருவதை தடுத்தல் மற்றும் நாட்டில் காணப்பட்ட தொற்றுநோய் நிலைமையின் காரணமாக டோம் ஒன்று வாடகை அடிப்படையில் பெறப்பட்டிருந்தது. | நிகழ்ச்சித் திட்டத்தை நடாத்தும் போது அரச நிதியை குறைந்தரீதியில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | எரமிணியாய விவசாய பயிற்சி நிலையத்தின் சரியான திட்டமொன்றுடனும், மேற்பார்வையின்றியும் அமுல்படுத்தப்பட்ட விவசாய பயிர்களை நடும் 06 செயற்திட்டங்களுக்கு உரியதாக 2021 ஒக்தோபர் 06 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையின் பிரகாரம் பண்ணை உத்தியோகத்தர்களின் மேற்பார்வை நலிவாக இருந்தமை மற்றும் பராமரிக்கப்படாமையின் காரணமாக கூட்டுமொத்தமாக ரூபா | நிகழ்ச்சித் திட்டத்தை திட்டமிடும் போது கிரயத்தை குறைக்கும் வகையில் நடவடிக்கை எடுக்குமாறு உரிய பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | செயற்திட்டம் ஆரம்பித்த நோக்கத்தை நிறைவேற்றும் பிரகாரம் திட்டங்களை தயாரித்து உரிய மேற்பார்வையின் கீழ் அமுல்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 449,133 கிரயம் பயனற்ற செலவினத்திற்கு உட்பட்டிருந்தது. | | |
| (ஆ) | எந்தவொரு கட்டணமும் அறவிடப்படாமல் இளைஞர் சேவைகள் கம்பனிக்கு மன்றத்தின் கட்டடத்தை பயன்படுத்துவதற்கு இடவசதிகள் வழங்கப்பட்டிருந்த போது களஞ்சியம் மற்றும் 50 சாரதிகளுக்கு மாத்திரம் தங்குமிட வசதிகளை வழங்குவதற்கு நிர்மாணிக்கப்பட்ட கிரயம் ரூபா 107,526,046 ஆன புதிய கட்டிடத்தின் இரண்டாவது மாடி எதிர்பார்த்த நோக்கத்திற்கு நிறைவேற்றப்படாமல் மன்றத்தின் பாதுகாப்பு சபையின் அங்கீகாரமின்றி தலைவரால் 2021 யூன் 10 ஆந் திகதி இலங்கை இளைஞர் சேவைகள் தனியார் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும், 2016 ஆம் ஆண்டு முதல் ஐந்து வருடங்களுக்கு அண்மித்த காலம் மன்றத்தின் பிரதான களஞ்சியம் தற்காலிகமாக 03 இடங்களில் பாதுகாப்பற்று காணப்பட்டது. | சாரதிகளின் விடுதியொன்றை ஸ்தாபிப்பதற்காக தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் களஞ்சியத்தை தாபிப்பதற்கு முன்னர் அதற்குரிய பூர்த்தி செய்யப்பட வேண்டிய உட்கட்டமைப்பு வசதிகள் பூர்த்தி செய்யப்பட வேண்டி இருந்தமையால் அந்தப் பணிகள் முடிவடைந்ததன் பின்னர் களஞ்சியத்தை பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் செயற்திட்டத்தை அமுல்படுத்துதல் வேண்டும். |
| (இ) | வருமானம் சேகரித்தல் தொடர்பான முறையான திட்ட முறைமையொன்று பின்பற்றப்படாமையின் காரணமாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்குரிய எரமிணியாய அழகியல் மற்றும் விவசாய பயிற்சி நிலையத்தில் அரிசி இருப்பை தனியார் பயன்பாட்டிற்கு எடுத்தல், தொலைந்து போதல் மற்றும் அழிவடைதல் போன்ற காரணங்களினால் ரூபா | அரிசி இருப்பு ஸ்டார்ட் அப் வெலேன்ச் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்ட சார நிலக் கண்காட்சியின் போது விற்பனை செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. மிகுதி அரிசி கொரோனா தொற்றுநோய்க்கு உட்பட்ட இளைஞர் யுவதிகளின் குடும்பங்களுக்காக பகிர்ந்தளிப்பதற்கும், இளைஞர் சேவைகள் மன்றத்தின் கொவிட் | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் முறையான பரீட்சிப்புக்களை மேற்கொண்டு மிகுதி நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 1,133,142 பெறுமதியான 8,435 கிலோகிராம் அசிரி இருப்பு மற்றும் முட்டை உற்பத்தியில் ரூபா 127,579 வருமானம் என்பன இழக்கப்பட்டிருந்தது. | நோய்க்கு உட்பட்ட பதவியணியினருக்கு பகிர்ந்தளிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | |
| (ஈ) | மன்றத்தால் சிஸ்கோ கணனி பயிற்சி பாடநெறியை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டு சிஸ்கோ சர்வதேச கம்பனி மற்றும் மன்றத்திற்கு இடையே 2020 திசெம்பர் 04 ஆந் திகதி புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு அதற்காக 2021 யூலை 15 ஆந் திகதி ரூபா 15,708,173 பெறுமதியான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த உபகரணங்கள் 2021 ஒக்தோபர் 29 ஆந் திகதி வரை விளைவற்று குவித்து வைக்கப்பட்டிருந்தது. எனினும் முறையான திட்ட முறைமையின்றி 10 உத்தியோகததர்கள் புதிதாக ஆட்சேர்க்கப்பட்டு அவர்களுக்காக 2021 ஒக்தோபர் வரையிலும் ரூபா 4,174,874 அளவில் ஒட்டுமொத்த செலவினமொன்றைச் செய்து மன்றத்தின் மூலம் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட கணனி பாடசாலை வ/ப இலங்கை இளைஞர் சேவைகள் தனியார் கம்பனியின் கீழ் ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | சிஸ்கோ நிறுவனத்தின் மூலம் கணனி மதியுரையாளர்களுக்கு வழங்குகின்ற செயல்முறைப் பயிற்சி 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் நாட்டில் காணப்பட்ட தொற்றுநோய் நிலைமையின் காரணமாக அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தது. இந்த பாடநெறியை ஆரம்பிப்பதற்காக பொருத்தமான உட்கட்டமைப்பு வசதிகளை ஸ்தாபித்ததன் பின்னர் உபகரணங்களை கொண்டுவருவதற்காக நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | பாடநெறியை ஆரம்பிப்பதற்கான பொருத்தமான உட்பகட்டமைப்பு வசதிகளை ஸ்தாபித்ததன் பின்னர் பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருந்த துடன் திட்டமிடப்பட்ட பிரகாரம் எதிர்பார்தத நோக்கங்கள் நிறைவேற்றப்படல் வேண்டும். |

**3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த எரமிணியாய | இது தொடர்பாக பொறுப்பு வாய்ந்த | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் |

| | | |
|---|---|---|
| சுவிஸ் பயிற்சி நிலையத்தின் நான்கு நிர்மாண செயற்திட்டங்கள் 2021 ஒக்தோபர் 10 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இந்த நிர்மாணங்களுக்காக கூட்டுமொத்தமாக ரூபா 4,563,066 பெறுமதியான கட்டிட பொருட்களை கொள்வனவு செய்வதற்காக இரண்டு வழங்குனர்களுக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த பொருட்களில் 54 சதவீதம் அதாவது கூட்டுமொத்தமாக ரூபா 2,459,188 பெறுமதியான பொருட்கள் நிர்மாண வளவில் கிடைத்தமைக்கு போலியான ஆவணங்கள் தயாரித்து உத்தியோகத்தர்களினால் மோசடியாக பயன்படுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பான நட்டம் 2022 ஏப்ரல் வரையும் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகத்தர்களுக்கு ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுப்பதற்காக ஆரம்ப விசாரணைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.<br><br>எரமிணியாய பயிற்சி நிலையத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தராக செயற்பட்டிருந்த உத்தியோகத்தரை வேலை நீக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | முறையான பரிசோதனைகளை மேற்கொண்டு மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

**3.4 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இளைஞர் அமைப்புக்கள் மற்றும் அபிவிருத்தி பிரிவின் மூலம் அமுல்படுத்தப்பட்ட யூத் போ யூத் நிகழ்ச்சித் திட்டத்திற்காகவும் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்திற்காகவும் கொள்வனவு செய்யப்பட்ட கூட்டுமொத்தமாக ரூபா 10,612,500 பெறுமதியான 83 டெக்ஸ்டொப் கணனிகள் மற்றும் ரூபா 260,000 பெறுமதியான தந்தூரி அடுப்பு என்பன 17 நாட்கள் முதல் 09 மாதங்கள் வரையான காலத்தில் | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | களஞ்சிய தேவைகள் தொடர்பாக கவனம் செலுத்தி பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விளைவற்று களஞ்சியப் படுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு களஞ்சிய இருப்பு பட்டோலையின் பிரகாரம் 22 வருடங்கள் முதல் 06 மாதங்கள் வரை களஞ்சியத்தில் விளைவற்றுக் காணப்படுகின்ற ரூபா 3,653,409 பெறுமதியான இருப்புக்களில் 25,238 அலகுகள் காணப்பட்டது. | விளைவற்றுக் காணப்படுகின்ற இந்த பொருட்கள் தொடர்பாக கண்டறிந்து தேவையின் அடிப்படையில் பயன்பாட்டிற்கு எடுக்கக் கூடிய பொருட்களை விநியோகிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | பொருட்களின் தேவைகள் தொடர்பாக கவனம் செலுத்தி கொள்வனவு மேற்கொள்ள வேண்டியிருந்த துடன் தேவையின் அடிப்படையில் பயன்பாட்டிற்கு எடுக்கக்கூடிய பொருட்களை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.5 பெறுகைகள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் நடாத்தப்பட்ட ‘‘பீ ஹெப்பி வித் யூத்’’ நிகழ்ச்சித் திட்டத்திற்காக பெறுகைகள் வழிகாட்டிக் கோவை பின்பற்றப்படாமல் ட்ரக் வண்டியொன்றில் பொருத்தப்பட்ட வீடியோ சுவருடன் வாடகைக்கு பெறும் அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்காக 2021 ஒக்தோபர் 07 ஆந் திகதி வரை நாளொன்றிற்கு ரூபா 60,500 வீதம் 14 நாட்களுக்காக ரூபா 847,000 செலுத்தப்பட்டிருந்தது. | ‘‘பீ ஹெப்பி வித் யூத்’’ நிகழ்ச்சித் திட்டத்திற்குரிய வீடியோ சுவருடன் ட்ரக் வண்டியொன்றை பெற்றுக்கொள்ளும் போது அதற்குரிய முன்னைய பதிவு செய்யப்பட்ட வழங்குனர் இல்லாமை மற்றும் கொரோனா தொற்றுநோயின் காரணமாக அநேகமான நிறுவனங்கள் திறக்கப்படாமையின் அடிப்படையில் திறந்த கூறுவிலை கோருதல் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. அதன் பிரகாரம் குழுவொன்றின் மூலம் கூறுவிலைகளை பெற்றதன் பின்னர் தொழில்நுட்பக்குழு பரிந்துரையுடன் பெறுகை பணிகள் நிறைவேற்றப்பட்டிருந்தது. | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பெறுகை வழிகாட்டிக் கோவைக்கு இணங்க பெறுகை பணிகள் நிறைவேற்றப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் உரிய திட்டம் இன்றி 2021 திசெம்பர் மாதம் ரூபா 240 இலட்சத்திற்கு மேற்பட்ட பெறுமதியுடைய கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டு பொருட்களின் கணிசமான அளவு ஒரு வருடத்திற்கு அண்மித்த காலம் ஹெய்யன்துடுவ பயிற்சி நிலையத்தில் களஞ்சியப் படுத்தப்பட்டிருந்தது. அந்தப் பொருட்களின் உத்தரவாத காலம் முழுமையாக கடந்த கூட்டுமொத்தமாக ரூபா 1,720,377 ஆன 23 Sony Hi Fi System மற்றும் மொத்த உத்தரவாதக் காலம் அரைவாசி முடிவடைந்த கூட்டுமொத்தமாக ரூபா 3,454,922 ஆன தொலைக்காட்சி மற்றும் 46 மல்டிமீடியா புறஜெக்டர் மற்றும் ரூபா 120 இலட்சம் பெறுமதியான 25 கிலோகிராம் சலவை இயந்திரம் மற்றும் 03 துணி உலர வைக்கும் இயந்திரங்கள் என்பன கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த இயந்திரங்கள் பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | தேவையினை இனங்கண்டு இந்த உபகரணங்கள் பெறப்பட்ட போதும் உக்கிரமடைந்த கொவிட் தொற்றுநோய் நிலைமைக்கிடையே நாட்டில் காணப்பட்ட நிலைமையின் அடிப்படையில் எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் இந்த உபகரணங்களை விநியோகிக்கப்பதற்கு முடியாதிருந்தமையால் இந்த உபகரணங்கள் 2022.04.22 ஆந் திகதி பிரதேசங்களுக்கு விநியோகித்து பூர்த்திசெய்யப்பட்டுள்ளது. | பொருட்களின் தேவை தொடர்பாக கவனம் செலுத்தி பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முகாமைத்துவம் அதிக கவனம் செலுத்துதல் வேண்டும். |
| (இ) | 2021 ஆம் ஆண்டின் போது தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் பெறுகைகள் வழிகாட்டி பின்பற்றப்படாமல் வ/ப இலங்கை இளைஞர் சேவைகள் தனியார் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 3,045,700 பெறுமதியான 08 அச்சிடல் கட்டளைகள் கம்பனியால் வெளி நிறுவனத்தின் மூலம் | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | பெறுகைகள் வழிகாட்டியின் பிரகாரம் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும். |

நிறைவேற்றப்பட்டு 10 சதவீதம் முதல் 108 சதவீதம் வரையிலான இலாப பங்கு வைத்து இளைஞர் சேவைகள் மன்றத்திற்கு ரூபா 3,886,370 பெறுமதியில் வழங்கப்பட்டிருந்தது.

## 3.6 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மன்றத்தால் முறையான ஆட்சேர்ப்பு திட்டமின்றி 2021 பெப்ரவரி மாதம் முதல் பயிற்சி பெறாத எழுதுவினைஞர்களாக 11 உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டு அவர்களுக்கு நாளொன்றிற்கு ரூபா 1,800 வீதம் 2021 ஏப்ரல் மாதம் வரை கூட்டுமொத்தமாக ரூபா 488,700 செலுத்தப்பட்டிருந்தது. | மன்றத்தில் வெற்றிடமாக காணப்படுகின்ற பதவிகளில் சேவை தேவையின் அடிப்படையில் இது மேற்கொள்ளப்பட்டிருந்த துடன் எதிர்காலத்தில் உள்ளக பதவியுயர்வுகளுக்காக அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள மையால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | ஆட்சேர்த்தல் நடைமுறையின் பிரகாரம் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |